13 /

4438

15 FEB 2017

சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– வேலைவாய்ப்பற்ற பார்வையற்ற மற்றும் இதர மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள நிபந்தனைகள் திருத்தம் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.01

நாள்: 31–01–2017
துன்முகி, தை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை எண்.734, சமூக நலத் துறை, நாள் 25–09–1981.
2. அரசாணை(நிலை) எண்.113, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22–08–2008.
3. அரசாணை(நிலை) எண்.31, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை, நாள் 28–06–2010.
4. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கடிதம் எண்.வே.உ.11/25664/2011, நாள் 01–08–2011 மற்றும் 15.06.2016.
5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.3878/மா.தி.ந 3(1)/2011, நாள் 27–08–2011.

---

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கான நிவாரணத் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு பார்வையற்ற பதிவுதாரர்கள் விண்ணப்பதாரர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு பெற்றவராக இருத்தல் வேண்டும் எனவும், மேலும், விண்ணப்பதாரர் 40 வயதுக்கு மிகாமலும் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் 45 வயது) இருத்தல் வேண்டும் எனும் நிபந்தனைகளுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–08–2008 அன்று ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட புதிய சலுகைகள் தொடர்பாக

பார்வையற்றவருக்கு வழங்குவது போன்றே அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பு முற்றிலுமாக நீக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கடந்த 23.07.2011 அன்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் நலத் துறை தொடர்பான கூட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளான வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கான நிவாரணத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகைத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவி முழுமையாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் உதவித் தொகை பெறுவதற்கான உச்ச வயதுவரம்பு 40, தாழ்த்தப்பட்ட இனத்தர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 45 என்ற போதிலும் ஒப்பளிப்புக்குப் பின்னர் உச்ச வயதுவரம்பினை கடந்தாலும் 10 ஆண்டுகளுக்கு முழுமையான உதவித் தொகை வழங்குவது தொடர்பாக அரசுக்கு உரிய கருத்துரு அனுப்புவது குறித்தும் விவாதிக்கப்பட்டது என்றும், அதன்படி, தமிழக அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களுள் மிகவும் மனிதநேயம் மிக்கதாகக் கருதப்படும் வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கான நிவாரணத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை திட்டம் ஆகியவற்றின் கீழ், தகுதி வாய்ந்த அனைத்து பதிவுதாரர்களுக்கும், உதவித் தொகை வழங்கப்பட ஏதுவாக, இத்திட்டங்களின் கீழ் உதவித் தொகை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்ட உச்ச வயதுவரம்பு 40 எனவும், தாழ்த்தப்பட்ட இனத்தவர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 45 எனவும், திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவர்களுக்கு வயது வரம்பினை கணக்கில் கொள்ளாமல் தொடர்ந்து இவர்களுக்கு 10 ஆண்டு காலம் அல்லது வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை உதவித் தொகை வழங்கலாம் என்றும், அதற்கு உரிய திருத்தம் செய்து அரசு ஆணை வழங்குமாறு இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றம் பயிற்சித் துறை மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காணும் பொருள் குறித்து மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தற்போது அனைத்துவகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்கப்படும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை பெற உச்ச வயதுவரம்பு 40 எனவும், தாழ்த்தப்பட்ட இனத்தவர் / பழங்குடியினருக்கு 45 வயது எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை பெற மாற்றுத் திறனாளிகள் பலர் பதிவு செய்து திட்டத்தில் அனுமதிக்கப்படும்போது அதிக வயது ஆகிவிடுவதால் குறைந்தபட்சம் 10 வருடங்கள் திட்டத்தில் பயனடையும் முன்னர் உச்ச வயதுவரம்பினை அடைந்து விடுகிறார்கள். ஆனால், மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியமாக மாதம் ரூ.1000/– பெற குறைந்தபட்ச வயதுவரம்பு 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, இத்திட்டத்தில் அனுமதிக்கப்படும் உச்ச வயதுவரம்பாக 45 என நிர்ணயிக்கவும், 45 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியம் பெறவில்லை என சுயசான்று அளிக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளார். மேலும், மாற்றுத் திறனாளிகள் ஏற்கனவே உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு சிரமப்படுவதால், திட்டத்தில் அனுமதிக்கப்படும் உச்ச

வயது வரம்பினை வகுப்பு வாரியாகப் பிரிக்காமல் அனைத்து வகுப்பினை சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கும் ஒரே வயது வரம்பாக 45 என நிர்ணயிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

6. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பரிந்துரையை கவனமுடன் பரிசீலினை செய்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி 3(ii) ல் உள்ள விண்ணப்பதாரர் 40 வயதுக்கு மிகாமலும் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் 45 வயது) இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குப் பதிலாக, இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் உச்ச வயது வரம்பினை கணக்கில் கொள்ளாது 10 ஆண்டு காலம் அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை உதவித் தொகை வழங்கிட வகை செய்தும் 45 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியம் (PHP) பெறவில்லை என சுயசான்று அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தும் அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.66930/நிதி(சந)/2016, நாள்25.01.2017–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, இயக்ககம், கிண்டி, சென்னை–600 032.

**<u>நகல்:-</u>**
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/1/17

பிரிவு அலுவலர்.

31/1/17